கைகளும் தமிழிலேயே நடைபெறவேண்டும். மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. விநாயகம் போன்றவர்களுக்கு வேண்டுமானால் தமிழில் பேச இன்னும் கொஞ்சம் அவகாசம் தேவையாக இருக்கும். தமிழை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆட்சி தமிழிலே நடைபெறுகிறது. தமிழ் மொழியை அறியாமல் இருக்கிற ஒருவர் கவர்னராக இருக்கிற நிலையில் நிர்வாகத்தில் எவ்வளவு சிக்கல் ஏற்படுகிறது என்பதையும் நினைவுபடுத்தி, திருப்பவும் என்னுடைய கருத்தை சொல்கிறேன் . . .

3. ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி).

(இ) கவர்னரைப்பற்றி விவாதத்தில் குறிப்பிடுதல்.

THIRU K. VINAYAKAM : Sir, with your permission, I wish to raise a point of order. Regarding the appointment of the Governor or the Office of the Governor, no hon. Member has got a right to speak on it. This may be stated outside this House but on the floor of the House no hon. Member has a right to question his appointment or salary. So, all these things are quite irrelevant to the matter before the House.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ஆங்கிலத்தில் சொன்னது என்னவென்றால் கவர்னர் அவர்களைப் பற்றி இந்த அவையிலே பேசக்கூடாது என்ற ஒழுங்குப் பிரச்னை ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதற்குரிய விதிமுறை என்னவென்று விளக்க வேண்டும். விதிமுறை என்னவென்றால் கவர்னர் பெருமானைப் பற்றி தனிப்பட்ட முறையில் அவர்களுடைய நடத்தைப்பற்றி பேசக்கூடாது. அதாவது 67-வது விதி 'A member, while speaking must not reflect upon the conduct of the Governor. . .' என்பது. அதாவது கவர்னர் அவர்களுடைய நடத்தையைப்பற்றி பேசக் கூடாதே ஒழிய, அவர்களுடைய நியமனத்தைப்பற்றியோ அவர்களுடைய ஊதியத்தைப் பற்றியோ அல்லது நியமன முறையைப்பற்றியோ பேசலாம். எதைப்பற்றி பேசக்கூடாது என்றால், அவர்களுடைய காண்டக்ட் அவர்களுடைய நடத்தையைப்பற்றி பேசக்கூடாது. மற்றபடி பேசலாம் என்பது என்னுடைய தீர்ப்பு.

திரு. கே. விநயகம் : 'ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர்' மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் சொன்னது கவர்னர் பெருமான் தங்களுடைய உரையை தமிழிலே ஆற்றியிருந்தால் நல்லது என்று சொன்னது அவருடைய காண்டக்டைக் குறிக்கும். ஆதலால் பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்புகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : நான் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இந்த ஒழுங்குப் பிரச்னையின் மீது ஏதாவது கூறிக்கொள்ள விரும்பினால் கூறிக்கொள்ளலாம்.

1967 மார்ச் 27]

திரு. ம. பொ. சிவஞானம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான் இங்கு பேசிக்கொண்டிருப்பது கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துத்தான். இதை நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். இரண்டாவதாக, ஆதரித்துப் பேசுவது மட்டுமல்ல; ஆதரிக்கின்றபொழுது கவர்னரைபபற்றி அரசியல் சட்டத்திலுள்ள விதிகளில் உள்ள குறைகளை நினைப்பூட்டுகிறேனே தவிர, கவர்னரைப் பற்றி அல்ல. மூன்றாவதாக, கவர்னர் உரை தமிழிலே இல்லை என்று நான் சொல்லவில்லை. தமிழிலே இருக்கிற வாய்ப்பு எதிர்காலத்தில் ஏற்படவேண்டும் என்ற முறையில்தான் நான் கூறினேன். (ஆரவாரம்).

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: எனவே இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. விநயகம் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை உண்மையாக எழும்பவில்லை. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் தொடர்ந்து பேசுவார்கள்.

7. கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி).

திரு. ம. பொ. சிவஞானம்: ஆகவே இந்த நினைப்புகூட வரக் கூடாது என்றால், இந்த உரையைப் பற்றி இத்தனை நாட்கள் நாம் நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு விஷயமே கிடைக்காது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

இரண்டாவதாக, நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த நியமன முறைப்படி முன்பு வங்காளத்தில் மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களைக் கவர்னராக நியமித்தார்கள். வங்காளத்திற்கு ராஜாஜி அவர்கள் கவர்னராகப் போகும்போது அவருடைய நியமனத்திற்கு அங்கே எதிர்ப்பு இருந்தது. தங்களைப் புரிந்து கொள்ளாத ஒருவர் அங்கே கவர்னராக வருவதற்கு எதிர்ப்பு இருந்தது. அதற்குப் பிறகு கவர்னராக நியமிக்கப்பட்ட இரண்டு பேர்களும் வங்காளிகள்—வங்காளத்தைச் சேர்ந்தவர்களைத்தான் மத்திய அரசு நியமித்திருக்கிறது. அந்த நீதியை எல்லா மாநிலங்களுக்கும் வழங்குவதில் எது தடங்கலாக இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. அதே நேரத்தில் கவர்னர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் அஞ்சலியையும் கூட தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், கவர்னர் அவர்களுடைய உரையிலே ஒரு வாசகம் இருக்கிறது. "மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களைக் கேட்கவேண்டிய நேரம் வந்துவிட்டது" என்று கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பாக எடுத்துக்கொண்டால், கூடுதலான அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வேண்டும் என்ற கோரிக்கை அரசியல் சட்டம் இயற்றப்பட்ட வட்டாரத்திலிருந்து அது நடைமுறைக்கு வந்த நாளிலிருந்தே—இருந்துகொண்டு வருகிறது என்பதை நினைப்பூட்ட விரும்புகிறேன். இரண்டாவது முக்கியமான அம்சம், அரசியல் சட்ட நிபுணர்கள் எல்லாம் அடிக்கடி